

யாழ்ப்பாணம் குரைகோட்டம்
கோண்டாவிற் பதியில் உதித்து
உடுவில் தெற்கூர் யமாவில்
வாழ்வாங்கு வாழ்ந்த

**உயர்திரு தம்பாப்பிள்ளை**

## சோமசுந்தரம்

அவர்களின் நினைவில் ஒரு

நறுமலர்

# வண்ண மாலை

**24-05-1994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



கோண்டாவில் குமரகோட்டம்
உயர்குடித் தோன்றல் வேளாண்மரபு
அமரத்துவமடைந்த

**தம்பாப்பிள்ளை சின்னப்பிள்ளை**

தம்பதிகளின் மூன்றாவது புதல்வனும்
பிரபல வர்த்தகருமான

**அமரர் உயர்திரு**

# தம்பாப்பிள்ளை சோமசுந்தரம்

அவர்களின் நினைவாகத் தொடுக்கப்பட்ட

**வாடா நறுமலர்**

# வண்ண மாலை

---

**24-05-1994**
செவ்வாய்க்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மந்த மாருதத் தென்றலென
மந்த காசச் சிரிப்பினோடே
மனைவி மக்களுடன்
யாமாவில் வாழ்ந்த செம்மல்
சொந்த மனை மனைவி மக்கள்
சுற்றத்தோடயல் நண்பர்
சோகக் கடல் வீழ்ந்தது
சொல்லொனா வேதனைதானடைய
எழுபத்தொடு நான்கு ஆண்டுகள்
வாழ்த்தது போதுமென்று
சித்திரைத் திங்கள் பதினொராம் நாள்
மாலை ஐந்து மணியில்
இந்த நில வாழ்வு விட்டு
இறைவனடி சேர்ந்த சோமசுந்தரம் சரிதமதை
இனிய தமிழ் கவிசெய்து
சமர்ப்பிப்போம் இங்கு நாம்.

யாமாச் சந்து.
மானிப்பாய்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''



அன்னையின் மடியில்:

15-06-1920

ஆண்டவன் அடியில்:

24-04-1994

# அமரர் உயர்திரு
# தம்பாப்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள்

## இறு வெண்பா

ஆண்டு பவ சித்திரை ஞாயிற்றுக்கிழமை
பூண்ட திதி திரயோதசியில் - ஈண்டுபுகழ்
சோமசுந்தரம் காசினியை விட்டகன்று
இறைவனடி சேர்ந்தார் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திரு தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

வித்தையும் வீரமும், அறமும் வேள்வியும், குழலும் யாழும், குரல் முதல் ஏழும், ஆடலும் பாடலும் பாணியும் தூங்கும் கொழித்த பெரு விலாசம் உரைசால் சிறப்பின் பயன் கெழுபேரூர் நீள்புகழ் மன்னும் கோண்டாவில் எனும் மூதூர்.

திருமகள் புகுந்த இச்செழும்பதிக்கண் வந்து தித்த தம்பாப்பிள்ளை என்னும் உத்தமனார் சின்னப்பிள்ளை என்றாளை கைப்பிடித்தே பெற்றனர் பொன்னுச்சாமி (காலஞ் சென்றவர்) சொக்கலிங்கம் (காலஞ் சென்றவர்) சோமசுந்தரம் (காலஞ் சென்றவர்) கோபாலசிங்கம் (காலஞ் சென்றவர்) மார்க்கண்டு என்ற மக்கள், ஐவரில் 1920 ஆம் ஆண்டு ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திரு மாமணியெனத் தோன்றினார் சோமசுந்தரம் என்னும் திருத்தகு மாணிக்கக் கொழுந்து.

தெய்வ பக்தியும். நிதான புத்தியும் விடா முயற்சியுமுடைய இப்பெரியார் செல்வமும் செழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையும் செழித்திருந்த உடுவில் தெற்கூர் யாமா வில் தோன்றிய விநாயகமூர்த்தி பறுவதம் அவர் களது குமாரி இரத்தினபூபதி பருவமங்கையாக விளங்கி நின்றாள். அழகிய ஊரின் அருந்ததி அவளை அறத்துறை விளங்கிய அந்தணர் மறை வழி காட்டிட முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளங்கும் கதிர் இரண்டும் ஒருங்கிருந்த காட்சியே போலத் திருமணம் புரிந்து வாழ்ந்தார். கயமலர்க் கண்ணியும் அன்புசால் கொழுநனும் பெறக்கரிய பேறுகள் சகலதும் பெற்று உரிய மணவாழ்வு வாழும் பேறு பெற்றனர்.

''பெறுமவற்றுள் யாமறிந்ததில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற''

என்ற வள்ளுவர் வாக்கில் நிலைப் பெருளாய் விளங்கினர். இவர்தம் அருந்தவப் பயனால் பின் வரும் மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் வாய்க் கப் பெற்றனர்

திருமதி நிர்மலாதேவி கணவன் திரு. கிருஷ் ணமூர்த்தி புதல்வர்கள் செல்வன் சிவகுமார், செல்வன் விஜயகுமார்

திருமதி யமுனாதேவி கணவன் திரு. நாகேந் திரம் புதல்வர்கள் செல்வி சங்கீதா செல்வன் சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரன், செல்வன் சயந்தன், செல்வி சத்தியமீரா, செல்வன் சந்துரு.

திரு. கிருபாமூர்த்தி மனைவி திருமதி புஷ்ப ராணி புதல்வர் செல்வன் கோபிதன், செல்வி துவாரகா.

திரு. தனபாலசிங்கம் மனைவி திருமதி திலக ராணி புதல்வி செல்வி மதுஷா.

திரு சத்தியமூர்த்தி

இல்லறம் ஓங்க மக்கள், மருமக்கள், பேரர் அனைவரையும் பெற்று பேரின்பம் துய்த்தார்.

விடாமுயற்சியுடைய இப்பெரியார் உடப்பு சிலாபத்தில் வணிகத் தொழிலில் ஈடுபட்டு சிலாபம் காளியம்மன் அருள்பெற்று பொருள் தேடி உயர்ந் தவர். வர்த்தகராக இருந்த இவர் ''உடுக்கை இழந்தவன் கைபோல தன் இனசனத்தாருக்கு மட்டுமில்லாமல் தன்னிடம் வந்த சகலருக்கும் மனம் கோணாமல் உதவிகள் செய்தார்

கோண்டாவில் காரைக்கால் சிவன்மேல் எல் லையில்லாத பக்தி கொண்டவர். என் நேரமும் மனதிலும் சொல்லிலும் சிவபெருமானேயே வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கொண்டிருப்பார். இறைபக்தி கொண்ட இவர் ஆலயப் பணிகளின் முன்னின்று உழைத்தார்.

குறைவிலாது வாழ்ந்தார், அலைவிலாது ஆவியை நீத்தார். தன்னைப் பிடித்த தகவுறு நோயால் ஏனோ இம்மை வாழ்வை வெறுத்தே அத்தன் ஆனந்தன் அம்பலவாணனின் பித்துப் பிடித்து இத்தலம் புலம்ப மாலையிட்ட மலரவள் துடிக்க மக்களும், மருகளும், பேரரும் உடன் பிறந்தோரும் மறுகியே மண்டி மார்பதை உடைக்க சாலை நெடுகலும் சான்றோர் அரற்ற பவ ஆண்டது சித்திரை திங்களினில் மறுமை வாழ்வை மதித்து இறைவனின் நிழல் எய்தினன் இனிதே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலத்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலான் நித்தம் வருக
சி கிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டா யுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிளியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலிய யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுத்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகனெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருப்பல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார்பு திருவேல் காக்க
வடிவேல் லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அருள்வேல் காக்க
பிட்டம் மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்துடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் வடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழுக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர் டு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்கார மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியானைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடிட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம்க ததறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிடச்
செக்கு செக்கு செதிற்செதி லாகச்
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலையங் குண்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரனை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாள்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தினமா மலையுறும் செங்கல்வா ராயா
சமரா புரிவாள் சண்முகத் தரசே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடனிரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவ துவாகித்
கந்தர் சஷ்டி கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்த வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழுவர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ் லட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் நிறைவுபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஓவு நாளுணர் வழியு நாளுயிர்
போகு நாளுயர் பாடைமேற்
காவு நாளிவை யென்ற லாற்கரு
தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா உனை நான்மறக் கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
    கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
    மதிப்பவர் மானணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
    திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
    குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
    பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
    மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
    சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொரு ணீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி வணக்கம்

இறைவனடி சேர்ந்த எங்கள் தலைவர்
இறுதிச் சடங்கில் இன்னருள் கொண்டு வந்து
அனுதாபம் கூறியோர்க்கும்
மறைந்த நாள் சடங்கினில் கலந்து
மன நிறைவு செய்தோருக்கும்
மலர்ந்த வீட்டுக்கிருத்திய நாளில்
பங்கு கொண்டோர்க்கும்
எங்கள் இனிய தலைவன் பேரால்
உங்களுக்கு இதயம் கலந்த நன்றி வணக்கம்
சிறந்தபடி எங்கள் சடங்குகள்
நிறைவேற ஒத்துழைத்த
சிறப்புமிகு நண்பர்கள் சுற்றம்
எல்லோருக்கும் நன்றி வணக்கம்

*யாமச் சந்தி,*
*மானிப்பாய்.*




அன்பு
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

*கோல்ட்ஸ் அச்சகம், உரும்பிராய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org